TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013

தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...

ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்

www.SAKKRAVIYUGAM.com

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 153 27.11.2025 THURSSDAY KARTHIGAI : 10 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 153 27.11.2025 வியாழக்கிழமை கார்த்திகை : 10 விலை : ரூ.5/-

3 "50 ஆண்டு உழைப்புக்கு நீக்கம் தான் பரிசு" செங்கோட்டையன் வேதனை

4 கரூர் கூட்ட நெரிசல் விவகாரம்: சிபிஐ விசாரணைக்கு 2-வது முறையாக நகர இன்ஸ்பெக்டர் ஆஜர்

2 தூய்மைப் பணிகளை தனியாருக்கு தாரைவார்க்கும் முடிவை கைவிட வேண்டும்: அன்புமணி கோரிக்கை

# "தமிழகத்தை தீவிரவாத மாநிலம் என சொல்லும் ஆளுநரின் திமிரை அடக்க வேண்டும்" : முதல்வர் ஸ்டாலின்

ஈரோடு: நவ.27-

'தீவிரவாதத் தாக்குதல்களில் மக்கள் பலியாவதை தடுக்க முடியாத பா.ஜ.க. ஆட்சியை புகழ்ந்து பேசியிருக்கின்ற ஆளுநர், அமைதிப் பூங்காவாக இருக்கின்ற தமிழ்நாட்டைத் தீவிரவாத மாநிலம் என்று திமிரெடுத்து பேசியிருக்கிறார். அவருடைய திமிரை அடக்க வேண்டும்' என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரையில், "நாம் தினந்தோறும் தொடர் திட்டங்களைத் செயல்படுத்துவதால்தான் எதிர்க்கட்சிகள் என்ன சொல்வது என்று தெரியாமல், விரக்தியில் பிரமைப் பிடித்தவர்களாக இருக்கிறார்கள். கடந்த ஆண்டு இந்த மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் நான் பேசும் போது, "சின்னியம்பாளையத்தில் பிறந்து, நாட்டு விடுதலைக்காக பாடுபட்டதோடு, தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட 'பால்வளத் தந்தை' சி.கு.பரமசிவம் திருவுருவச் சிலை ஈரோடு பால்பண்ணையில் நிறுவப்படும்" என்று அறிவித்தேன்.

விவசாயக் குடும்பங்களின் வருவாயை உயர்த்த, பால் விநியோக முறையை நவீனப்படுத்த அர்ப்பணிப்புடன் செயல்பட்டவர் அவர். தமிழ்நாடு அரசின் ஆவின் நிறுவனம், கூட்டுறவு பால் சங்கங்கள், பால் செயலாக்கக் கட்டமைப்புகள் அனைத்துமே அவர் விதைத்த விதையின் விளைச்சல். அத்தகைய பெரும் ஆளுமைக்கு நன்றி செலுத்த சொன்னபடியே, சித்தோடு பால்பண்ணை வளாகத்தில் அவருடைய திருவுருவச் சிலையை நிறுவி இருக்கிறோம்.

தன்னை மேற்கு மண்டலத்துக்காரர் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, இந்த மண்டலத்துக்கு இதுபோன்ற செயல்களைச் செய்திருக்கின்றாரா? அப்படி என்று நான் கேட்க விரும்பவில்லை! அவர் செய்தது எல்லாம் என்ன? வெறும் துரோகம்தான்! பச்சைத் துண்டை அணிந்து கொண்டு தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு பழனிசாமி பச்சைத் துரோகம் செய்கிறார் என்று நான் சொன்னதும், அவருக்கு கோபம் பொத்துக்கொண்டு வருகிறது.

"நான் ஒரு விவசாயி, இப்போதும் விவசாயம் செய்கிறேன்" என்று சொல்கிறார் பழனிசாமி. அவர் ஒரு துரோகி, இப்போதும் தொடர்ந்து துரோகத்தை செய்து கொண்டிருக்கிறார் என்று தான் சொல்லலாமே தவிர, அவரை விவசாயி என்று சொல்வது உண்மையான உழவர் பெருமக்களை அவமானப்படுத்துவதற்கு சமமாகிவிடும்.

நெல் கொள்முதலில் ஈரப்பதம் தளர்வு தொடர்பான தமிழ்நாட்டின் கோரிக்கையை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிராகரித்துவிட்டார்கள். பழனிசாமி உண்மையான விவசாயியாக இருந்தால், என்ன செய்திருக்க வேண்டும்? தமிழ்நாட்டின் கோரிக்கையை ஏற்கவேண்டும் பிரதமர் மோடி அவர்களே என்று அவர் சொல்லி இருக்க வேண்டுமா? வேண்டாமா? டெல்லியில் பல கார்களில் மாறி, மாறி சென்று யார் யாரையோ சந்திக்கிறீர்களே?

தமிழ்நாட்டு விவசாயிகளுக்காக கோரிக்கை வைக்க பிரதமரை சந்திக்கிறேன் என்று சொல்லுங்கள்ஞ் நீங்கள் சொன்னால் போதும்ஞ். தமிழ்நாடு அரசு சார்பில், நானே உங்களுக்கு காருக்கு ஏற்பாடு செய்து அதுவும் வேர்க்காத அளவுக்கு நல்ல வண்டியாக ஏற்பாடு செய்து அனுப்பி வைக்கிறேன். பழனிசாமி, இந்த மேற்கு மண்டலத்திற்கு இழைத்த பச்சைத் துரோகப் பட்டியலில், லேட்டஸ்ட் அடிஷன் கோவை மெட்ரோ ரயில் துரோகம்.

சென்னையை போல, கோவை, மதுரையின் வருங்கால வளர்ச்சிக்கும், மெட்ரோ ரயில் தேவை என்று



நாம் கோரிக்கை வைத்தோம். ஆனால், ஒன்றிய பா.ஜ.க. அரசு அதையும் நிராகரித்திருக்கிறது. 2011 மக்கள்தொகையை கணக்கில் வைத்து, நிராகரித்திருக்கிறார்கள். இப்போது 2025ஆம் ஆண்டு! சென்சஸ் எடுத்தால் 20 லட்சத்திற்கு அதிகமாக இருக்கும்.

இன்னும் சொன்னால், இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கி, திட்டத்தை நிறைவேற்றி முடிக்கும்போது 2035 ஆம் ஆண்டு ஆகி இருக்கும். வட மாநிலத்தில், 20 இலட்சத்துக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்களில் எல்லாம் மெட்ரோ திட்டத்துக்கு ஒப்புதல் கொடுத்து இயக்குகிறார்கள். தமிழ்நாடு என்றால் மட்டும் கம்பி கட்டுகின்ற கதையெல்லாம் சொல்கிறார்கள். பா.ஜ.க.வுக்கு வாக்களிக்காத தமிழ்நாடு எதைக் கேட்டாலும் தரக்கூடாது என்ற முடிவோடு இருக்கிறது பா.ஜ.க.

'அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால், கோவைக்கு மெட்ரோ கொண்டு வருவோம்' என்று பழனிசாமி சொல்லி இருக்கிறார். அதேபோல, பா.ஜ.க.வைச் சேர்ந்த கோவை சட்டமன்ற உறுப்பினர் ஒருவரும் இதே கருத்தைச் சொல்லி இருக்கிறார். அப்படியென்றால், திமுக ஆட்சியில் இருக்கிறது என்ற ஒரே காரணத்தால்தான் கோவை, மதுரை மக்களை பா.ஜ.க. பழிவாங்குகின்றது என்று ஒப்புதல் வாக்குமூலமே வழங்கியிருக்கிறார்கள். இப்படியெல்லாம் தமிழ்நாட்டிற்கு கொடுக்கின்ற குடைச்சல் போதாது என்று தமிழ்நாட்டின் வளர்ச்சியை நிரந்தரமாக கெடுக்க வேண்டும் என்றே ஒருவரை பாஜக ஆளுநரை நியமித்திருக்கிறார்கள்.

அவர் சமீபத்தில், இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு பேட்டி அளித்திருக்கிறார். தமிழ்நாட்டிற்கு சேவையாற்ற அவர் வந்திருப்பதாக சொன்னதை கேட்டதுமே, சிரிப்புதான் வந்தது. தமிழ்நாட்டில் பாதுகாப்புப் பிரச்சினைகள் இருக்கிறதாம். தீவிரவாதப் போக்கு நிலவும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறதாம். தமிழ்மொழி வளர்ச்சிக்காக இங்கே எதுவும் நடக்கவில்லையாம். எல்லோரும் ஆங்கிலம் படிக்கிறார்களாம். இப்படியெல்லாம் அவதூறு, ஆற்றாமை கலந்து புலம்பியிருக்கிறார் ஆளுநர்.

ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில்தான் பஹல்காம் தீவிரவாதத் தாக்குதல் நடந்து, சுற்றுலா சென்ற அப்பாவி மக்கள் பலியானார்கள்? ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில்தான் டெல்லி செங்கோட்டை அருகில் குண்டுவெடிப்பு நடந்து அங்கே மக்கள் பல பேர் பலியானார்கள்? பா.ஜ.க. ஆட்சியில்தான் மணிப்பூர் பற்றி இன்றைக்கு எரிந்து கொண்டிருக்கிறது?

தீவிரவாதத் தாக்குதல்களில் மக்கள் பலியாவதை தடுக்க முடியாத பா.ஜ.க. ஆட்சியை புகழ்ந்து பேசியிருக்கின்ற ஆளுநர், அமைதிப் பூங்காவாக இருக்கின்ற தமிழ்நாட்டைத் தீவிரவாத மாநிலம் என்று திமிரெடுத்து பேசியிருக்கிறார். அவருடைய திமிரை அடக்கவேண்டும்.

இக்கட்டான சூழல்களில் எல்லாம், தன்னுடைய தேசப்பற்றைக் காட்டி, நம்முடைய படை வீரர்களுக்கு அதிக அளவில் நிதியுதவி வழங்குவது நம்முடைய தமிழ்நாடுதான்! அப்படிப்பட்ட தமிழர்களை தேச விரோதிகளாக சித்தரிக்கின்ற ஆளுநரின் பேச்சு என்பது வன்மையான கண்டனத்திற்குரியது.

பா.ஜ.க.வுக்கு வாக்களிக்காதவர்கள் எல்லோரும் தீவிரவாதிகள் என்பதுபோல பேசுகிறார். அவர் வகிக்கின்ற அரசியல் சாசனப் பொறுப்புக்குத் துளியும் பொருத்தமற்ற, தகுதியற்ற தரக்குறைவான பேச்சு இது.

எங்கள் பிள்ளைகள் உலக வாய்ப்புகளுக்காக ஆங்கிலம் படிக்கிறார்கள். அதில், உங்களுக்கு என்ன பிரச்சினை? உங்களுக்கு எங்கே எரிகிறது? இன்னும் டபுள் மடங்கு ஆர்வமாக நாங்கள் ஆங்கிலம் படிக்க தயாராக இருக்கிறோம்!

இந்தியா முழுவதும் இந்தி பேசாத மாநில மொழிகள் இன்றைக்கு உயிர்ப்புடன் இருக்கும் என்றால், அதற்கு காரணமே தமிழ்நாடு உயிரைக் கொடுத்து மொழிப்போரில் ஈடுபட்டதுதான்! தாய்மொழிப் பற்று பற்றி தமிழ்நாட்டிற்கு நீங்கள் வகுப்பெடுக்க வேண்டாம்! அந்த பாடத்தில் பி.எச்.டி. வாங்கியவர்கள் நாங்கள்!

சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கலைஞர் பேரில், கும்பகோணத்தில் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அதற்காக மசோதாவை நிறைவேற்றி அனுப்பி வைத்தால், அனுமதி கொடுக்காமல், மூன்று மாதம் கிடப்பில் வைத்து விட்டு, குடியரசுத் தலைவருக்கு அனுப்பினார். நான் கேட்கிறேன்ஞ் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கின்ற அளவுக்கு, அதில் என்ன அரசியலமைப்புச் சட்ட பிரச்சினை இருக்கிறது? அவர் கிடப்பில் போட்டதை மறைக்க, குடியரசுத் தலைவர் மேல் பழியை போட்டு தப்பிக்க பார்க்கிறார்.

"கலைஞர்" பேர் வைக்கக் கூடாது என்று மாணவர்களின் நலனில் விளையாடுவது என்ன நியாயம்? மக்களாட்சியை மதித்து, இதற்கான உரிய அனுமதியை விரைவில் கொடுப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறேன். இல்லையென்றால், தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரையே நேரில் சந்தித்து கோரிக்கை வைப்பார்கள். விரைவில் நாடாளுமன்றம் கூடவிருக்கிறது. அந்த நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவார்கள்! ஆனால், ஒன்று, ஆளுநர் ரவி அவர்களே, நீங்கள் இப்படிதான் தொடர்ந்து பேசவேண்டும். உங்களுடைய தமிழ் வெறுப்பை தொடர்ந்து வெளிப்படுத்த வேண்டும்! நீங்கள் பேச பேசத்தான் எங்களுடைய வேலையும் ஈசியாகும்!

நேற்று, மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன் சோஷியல் மீடியாவில் ஒரு தகவலை பகிர்ந்திருந்தார்! 202425ஆம் ஆண்டில், புதிய வழித்தடத்துக்கு ரயில்வே துறையால், 31 ஆயிரத்து 458 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் நம்முடைய தெற்கு ரயில்வேக்கு வெறும் 301 கோடிதான் ஒதுக்கியிருந்தார்கள். அதாவது, ஒரே ஒரு பர்செண்ட்! ஒவ்வொரு முறையும் நம்முடைய பிரதமரை நான் சந்திக்கும்போதும், மறக்காமல் நான் வைக்கின்ற முக்கியமான கோரிக்கை தமிழ்நாட்டு மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்ற புதிய ரயில் திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்பதுதான். ஆனால், அதற்கு அவர்கள் எடுத்திருக்கின்ற நடவடிக்கை என்ன? இந்த, 'ஒன் பர்செண்ட்' நிதி ஒதுக்கீடுதான்! இதற்கு என்ன அர்த்தம்? "வரி வசூலிக்க மட்டும் தமிழ்நாடு; நிதி ஒதுக்கீட்டில் பட்டை நாமத்தை போடுகிறது பாஜகவின் ஆட்சி!". இதிலிருந்து பா.ஜ.க. நமக்கு சொல்லாமல் சொல்லுகின்ற மெசேஜ்! அரசியல் லாபங்களுக்காக பொதுமக்களை பழிவாங்கும் இந்த அற்ப அரசியல்தான் தமிழ்நாட்டில் பா.ஜ.க.வுக்கு தொடர் தோல்வியை அளித்துக் கொண்டிருக்கிறது.

முதுகெலும்பை இழந்து கர்சீப்பால் முகத்தை மூடிவிட்டு சுத்துகின்ற பழனிசாமி அவர்களின் துரோக அரசியல்தான் அவருக்கு, 'பத்து தோல்வி பழனிசாமி' என்ற பட்டப்பேரை பெற்றுத் தந்திருக்கிறது. மக்கள் மீதான எங்களின் உண்மையான அக்கறையும், மாநில உரிமைக்கான போராட்டமும்தான் எங்களுக்கு தொடர் வெற்றியை அளித்து வருகிறது.

கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றுகிறோம். அதுவும், ஒன்றிய பா.ஜ.க. அரசு அளிக்கின்ற தொல்லைகள், செயற்கை பேரிடர்கள் அதையும் மீறியும் நிறைவேற்றுகிறோம். ஒரு கோடியே 14 லட்சம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்குறோம். தகுதியானவர்கள் விடுபட்டிருந்தால் அவர்களுக்கும் அடுத்த மாதத்தில் இருந்து வழங்க இருக்கிறோம்.

அடுத்து அமையப் போவதும் திராவிட மாடல் ஆட்சிதான். இந்த சாதனைச் சரித்திரம் தொடரத்தான் போகிறது. உங்களின் அனைத்து கோரிக்கைகளையும், வேண்டுகோளையும் நான் நிச்சயம் செய்து கொடுப்பேன்! உங்களுக்கு ஒரு கவலையும் வேண்டாம்! மக்களுக்கும் கழக அரசுக்குமான பாசப்பிணைப்பைப் பார்த்து, அதைக் கெடுக்க சதி செய்கிறார்கள்.

சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் மூலம் மக்களின் வாக்குரிமையையே பறிக்கலாமா என்று பார்க்கிறார்கள். நீங்கள் எல்லோரும் வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். இப்போது அதுதான் இருப்பதிலேயே மிக மிக முக்கியமானது! ஏனென்றால், திராவிட மாடல் 2.0 உறுதியாகிவிட்ட ஒன்று! திமுக ஆட்சிதான் மீண்டும் அமையும்! தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணம் தங்கு தடையின்றி இரு மடங்கு வேகத்துடன் தொடரும்! அதற்கு நீங்கள் துணை நிற்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டு விடைபெறுகிறேன்" என்று முதல்வர் ஸ்டாலின் பேசினா.



■ திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் 76 வது இந்திய அரசியல் அமைப்பு தினத்தை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் வே. சரவணன் அவர்கள் தலைமையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை அனைத்து துறை அரசு அலுவலர்களும் வாசித்தனர்.




■ திருவாரூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில், எதிர்வரும் 27.11.2025 முதல் 30.11.2025 வரையிலான தேதிகளில் கனமழை முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என இந்திய வானிலை மையம் ஆரஞ்சு அலெர்ட் எச்சரிக்கை விடுத்ததன் பேரில், அனைத்துத்துறை அலுவலர்களுடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து ஆய்வுக்கூட்டம் திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

# அரசமைப்பு தினத்தை முன்னிட்டு மனிதநேய மக்கள் கட்சி சார்பாக உறுதிமொழி ஏற்பு

தேனி நவ,27

தேனி மாவட்டம் கம்பம் மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா வெளியிடும் அறிக்கை, நமது நாட்டின் அரசியலமைப்பு தினம் (Constitution Day). அனைவரும் போற்ற வேண்டிய நாள் இது. விடுதலைக்குப் பிறகு, இந்த நாட்டு மக்களின் உரிமைகள், சுதந்திரங்கள், சமத்துவம், சமூக நீதி ஆகியவை உறுதிப்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பு என்பது இந்திய ஜனநாயகத்தின் முதுகெலும்பு. சாதி, மதம், மொழி, பிராந்தியம் என்பதனைத் தாண்டி




அனைவரும் சமமான மக்கள் பிரதிநிதியின் கடமையும்,ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பும் ஆகும். இந்த அடிப்படையில் இன்று அரசமைப்பின் முகப்புரையை வாசித்து அரசு அலுவலர்கள் உறுதி எடுக்கும் நிகழ்வை முன்னெடுத்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் நிலைப்பாடு பாராட்டுக்குரியது.

அரசமைப்பு தினத்தில் தேனி தெற்கு மாவட்ட மனிதநேய மக்கள் கட்சி சார்பாக மாவட்ட செயலாளர் அப்பாஸ் மந்திரி தலைமையில் மாவட்ட துணை தலைவர் சலீம் பாட்ஷா மற்றும் நிர்வாகிகள் முன்னிலையில் அரசமைப்பு சட்ட உறுதிமொழி ஏற்கப்பட்டது



■ வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 முன்னிட்டு திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டத்திற்குட்பட்ட பகுதியில் வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் பெறப்படும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



■ மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம், அச்சம்பட்டி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டத்தின் கீழ் சாலை ஓரங்களில் மரக்கன்றுகள் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்



■ மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம், தெத்தூர் கிராமத்தில் தோட்டக்கலை மற்றும் மலைபயிர்கள் துறை சார்பில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கத் திட்டம் கீழ் அமைக்கப்பட்டுள்ள குறைந்த விலை வெங்காய சேமிப்பு கிடங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார், பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



## 41வது பாரதியார் தினம் மாநில அளவில் நடைபெற்ற ஹேண்ட்பால் போட்டியில் சின்னாளபட்டி சேரன்வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அணி வெங்கல பதக்கம்

திண்டுக்கல், நவ.27-

41வது பாரதியார் தினத்தை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்டம் வேட்டவளத்தில் நடைபெற்ற மாநில அளவிலான 19 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான ஹேன்ட்பால் போட்டியில் சின்னாளபட்டி சேரன்வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அணி வெங்கல பதக்கம் பெற்றது. சேரன் பள்ளி நிர்வாக அறங்காவலர் எம் சிவக்குமார். பள்ளி அறங்காவலரும், முதல்வருமான என்.திலகத்திடம் பரிசுகளை வழங்கி வாழ்த்தினார்கள்.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி சேரன்வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி கல்வி, விளையாட்டு சாதனைப்படைத்து வரும் பள்ளியாகும். இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் ஹேன்ட்பால் போட்டியில் தேசிய அளவில் சாதனை படைத்துள்ளார்கள். இதுதவிர ஹேன்ட்பால் விளையாட்டு போட்டியில் சாதனை படைத்ததால் அரசு பணியிலும், சேர்ந்துள்ளனர். இந்த போட்டிகளில் பங்கேற்ற சேரன்வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் 3ம் பரிசு வென்று வெங்கல பதக்கத்தையும் சான்றிதழையும் பெற்றனர். விளையாட்டு வீரர்களுக்கு பள்ளி வளாகத்தில் நடைபெற்ற விழாவிற்கு பள்ளி முதல்வரும், சேரன் கல்வி அறக்கட்டளை அறங்காவலருமான என்.திலகம் தலைமை தாங்கினார். பள்ளி மேலாளரும் அறங்காவலருமான ஓ.பி.பாரதிராஜா வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட மாநில ஹேண்ட்பால் கழக செயலாளரும், பள்ளி தாளளரும் நிர்வாக அறங்காவலருமான எம்.சிவக்குமார் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களை வாழ்த்தி பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் சேரன் கல்வி அறக்கட்டளை அறங்காவலர்கள் ஜெ.ஆல் பிரட்எங், அபிஷேக், மற்றும் உதவி தலைமை யாசிரியை வெண்ணிலா, பள்ளி உடற்கல்வி ஆசிரியர்களும், ஹேன்ட்பால் பயிற்றுன ர்களுமான என்.அசோக்குமார், டி.செந்தில்குமார், சி.ஆரோக்கிய ரஞ்சனி மற்றும் பள்ளி அலுவலக பணியாளர்கள் மகேஸ்வரி, பிரியா, பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு மாணவர்களை வாழ்த்தினார்கள்.

## தூய்மைப் பணிகளை தனியாருக்கு தாரைவார்க்கும் முடிவை கைவிட வேண்டும்: அன்புமணி கோரிக்கை





சென்னை, நவ.27-

தூய்மைப் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அண்ணாநகர், தண்டையார்பேட்டை மண்டலங்களில் குப்பை அள்ளும் பணியை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவை அரசு கைவிட வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “சென்னை மாநகராட்சிக்குட்பட்ட ராயபுரம், திரு.வி.க. நகர் ஆகிய மண்டலங்களில் குப்பைகளை அகற்றும் பணி தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டதைக் கண்டித்து தூய்மைப் பணியாளர்கள் 100 நாள்களுக்கும் மேலாக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் நிலையில், சென்னையில் மீதமிருக்கும் அண்ணாநகர், தண்டையார்பேட்டை ஆகிய மண்டலங்களிலும் குப்பைகளை அகற்றும் பணிகளை தனியாரிடம் வழங்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக தமிழக அரசு அறிவித்திருக்கிறது.

தூய்மைப் பணியாளர்களின் நலனில் எந்த அக்கறையும் இல்லாமல் தூய்மைப் பணிகளை தனியாருக்கு தாரை வார்ப்பது கண்டிக்கத்தக்கது. சென்னை மாநகராட்சியில் ராயபுரம், திரு.வி.க நகர் ஆகிய மண்டலங்களில் குப்பைகளை அகற்றும் பணி தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டதை எதிர்த்து தூய்மைப் பணியாளர் அமைப்புகள் தொடர்ந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வந்த போது, இந்த தகவலை சென்னை மாநகராட்சி தெரிவித்திருக்கிறது.

சென்னையில் தூய்மைப் பணிகள் சிறப்பாக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக இந்தக் கொள்கை முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக மாநகராட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மாநகராட்சியின் நேரடிக் கட்டுப்பாட்டில் தூய்மைப் பணியில் ஈடுபட்ட பணியாளர்கள் தான், தனியார் நிறுவனங்களின் கீழும் அதே பணியை மேற்கொள்ளப் போகிறார்கள்.

அவ்வாறு இருக்கும் போது, தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்தால் தான் தூய்மைப் பணிகள் சிறப்பாக நடைபெறும் என்றால், அது தூய்மைப் பணியாளர்களின் தவறு இல்லை; மாறாக மாநகராட்சியின் நிர்வாகத் திறமையின்மை தான்.

தூய்மைப் பணிகள் தனியாரிடம் ஒப்படைக்கப்படுவதற்கு மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்படும் காரணம் உண்மையல்ல... மாறாக, அதன் மூலம் ஆட்சியாளர்கள் ஆதாயம் பார்க்கத் துடிப்பது தான் காரணம் ஆகும்.

ஏற்கனவே, ராயபுரம், திரு.வி.க. நகர் ஆகிய மண்டலங்களில் குப்பைகளை அகற்றும் ஒப்பந்தத்தை தனியாரிடம் வழங்கிய திமுக அரசு, அதற்காக ரூ.2300 கோடி மக்களின் வரிப்பணத்தை தனியார் நிறுவனத்திற்கு வாரிக் கொடுத்தது. இப்போது அண்ணாநகர், தண்டையார் பேட்டை மண்டலங்களுக்கான ஒப்பந்தத்தின் மூலம் இன்னும் கூடுதலான தொகையை வாரி வழங்க இருக்கும் திமுக அரசு, அதற்கான வெகுமதியை பெற்றுக்கொள்வதற்காகத் தான் இத்தனை நாடகங்களையும் அரங்கேற்றுகிறது.

ஆட்சியாளர்கள் லாபம் அடைவதற்காக தூய்மைப் பணி தனியாரிடம் ஒப்படைக்கப்படும் போது, தூய்மைப் பணியாளர்களின் பணிப்பாதுகாப்பு பறிக்கப்படும்; ஊதியம் சுரண்டப்படும். ஆனால், இதைப் பற்றி ஆட்சியாளர்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. குப்பை அள்ளுவதில் கூட கொள்ளை அடிப்பது தான் திமுக ஆட்சியாளர்களின் கொள்கை ஆகும்.

தூய்மைப் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அண்ணாநகர், தண்டையார்பேட்டை மண்டலங்களில் குப்பை அள்ளும் பணியை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவை அரசு கைவிட வேண்டும். ராயபுரம், திரு.வி.க. நகர் ஆகிய மண்டலங்களிலும் குப்பை அள்ளும் பணியை மாநகராட்சியே நேரடியாக மேற்கொள்ள வேண்டும். பத்தாண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வரும் தூய்மைப் பணியாளர்களுக்கு பணி நிலைப்பு வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



## “அரசியலமைப்பின் மாண்பை காக்க உறுதியேற்போம்” விஜய்

சென்னை, நவ.27-

‘இந்திய அரசியலமைப்பின் மாண்பையும் அது நமக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளையும் காக்க உறுதியேற்போம்’ என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து விஜய் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘நம் கொள்கைத் தலைவர் அண்ணல் அம்பேத்கர் தலைமையிலான குழு, உலகத்திலேயே மிகச் சிறந்த அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றி நமக்கு அளித்துள்ளது. இதில் இறையாண்மை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்துள்ளது.

பல்வேறு மொழி, இனம், கலாசாரங்களுக்கு ஒத்த மதிப்பு அளித்து, மதச்சார்பின்மை காத்துள்ளது. பூரண ஜனநாயகத்துடன் வேற்றுமையில் ஒற்றுமை காண வழி வகை செய்துள்ளது. அண்ணலின் அரசியலமைப்புச் சட்டத்தை நாம் ஏற்றுக்கொண்ட தினத்தை இந்திய அரசியல் சாசன தினமாகக் கொண்டாடுகிறோம். இந்த நாளில், இந்திய அரசியலமைப்பின் மாண்பையும் அது நமக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளையும் காக்க உறுதியேற்போம்’ என தெரிவித்துள்ளார்.



■ தேனி மாவட்டம், தேனிஅல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து முனையத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் (Special Intensive Revision) பணிகள் தொடர்பாக விழிப்புணர்வு பேரணியை வாக்காளர் பதிவு அலுவலர்/பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத் பீடன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



■ தேனி மாவட்டம் சின்னமனூர் நகராட்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கு நியமன பதவி ஆணையை, கம்பம் சட்டமன்ற உறுப்பினர் ராமகிருஷ்ணன் தலைமையில், நகரமன்ற தலைவர் அய்யம்மாள் ராமு முன்னிலையில், முத்துவேல் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் வெற்றி மாற்றுத் திறனாளிகள் அறக்கட்டளையினர் நந்தகுமார், பூபதி, பழனி குமார், குச்சனூர் தனலட்சுமி ஆகியோர் சால்வை அணிவித்து வரவேற்றனர்.





## ஆத்தூர் ஒன்றியத்தில் எஸ்.ஐ.ஆர்.வாக்காளர் திருத்தல் பட்டியல் பணிகளில் செட்டியபட்டி ஊராட்சி முதலிடம் 95% வாக்காளர் பட்டியலில் சேர்ப்பு

### சின்னாளபட்டி பேரூராட்சியில் 3வது வார்டு அதிக வாக்காளர்களை சேர்த்து, முதலிடத்தை பிடித்தது

சின்னாளபட்டி, நவ.27-

ஆத்தூர் ஒன்றியத்தில் எஸ்.ஐ.ஆர்.வாக்காளர் திருத்தல் பட்டியல் பணிகளில் செட்டியபட்டி ஊராட்சி முதலிடம் பெற்றது 95சதவீதம் வாக்காள ர்களை பட்டியலில் சேர்த்தனர் சின்னாளபட்டி பேரூராட்சியில் 3வது வார்டு அதிக வாக்காளர்களை சேர்த்து முதலிடத்தை பிடித்தது. திண்டுக்கல் மாவட்டத்தில் எஸ். ஐ.ஆர்.வாக்காளர் திருத்தல் பட்டியல் பணிகள் நடைபெற்று வருகிறது. ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் அதிக வாக்காளர்களை சேர்க்க வேண்டுமென உத்தரவிட்டதன் பேரில் திமுக நிர்வாகிகள் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதனால் ஆத்தூர் தொகுதியில் ஆத்தூர் தொகுதியில் எஸ்.ஐ.ஆர்.வாக்காளர் திருத்த பட்டியல் பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது.குறிப்பாக ஆத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட செட்டியபட்டி ஊராட்சியில் 318,319,321 ஆகிய வாக்குச்சாவடி மையங்கள் உள்ளன. இவற்றில் 318 வாக்கசாவடி மையத்தில் உள்ள 1047 வாக்காளர்களில் 933 வாக்காளர்களை சேர்த்துள் ளனர். இதுபோல 319ல் 726 வாக்காளர்களில் 625 வாக்காளர்களை சேர்த்து ள்ளனர். 321 வாக்குச்சாவடி மையத்திற்கு உட்பட்ட பகுதியில் உள்ள 933 வாக்காளர்களில் 750 வாக்காளர் களை சேர்த்துள்ளனா. இதுகுறித்து முன்னால் ஊராட்சிமன்ற தலைவர் ராஜா கூறுகையில் அமைச்சர் அண்ணன் ஐ.பெரியசாமி அவர்கள் உத்தரவிட்டதால் எங்கள் ஊராட்சியில் வாக்குச்சாவடி முகவர்கள் தனலெட்சுமி, முத்துலெட்சுமி, பவுன்தாய் ஆகியோருடன் இணைந்து ஊராட்சி செயலாளர் கண்ணையா, தன்னார்வல தொண்டர்கள் பாண்டிச்செல்வி, அமுதா, ரீத்தா, வேலுமணி, ஜெயமணி, ராமேஸ்வரி, முருகேஸ்வரி, ராஜேஸ்வரி, சூரியா ஆகியோர் எங்கள் ஊராட்சிக்கு உட்பட்ட செட்டியபட்டி ஊராட்சிக்கு உட்பட்ட செட்ய டிபட்டி, வளையபட்டி, வேளாங் கண்ணிபுரம், கல்லுப்பட்டி, நண்பர்கள் புரம், கே.பி.டி .நகர், இளையஆழ்வார் நகர் உட்பட்ட பகுதிகளுக்கு சென்று பொதும க்களை சந்தித்து அதிக விண்ணப்பங்களை பெற்று, எஸ்.ஐ.ஆர்.வாக்காளர் திருத்தல் பட்டியலில் சேர்த்துள்ளனர் என்றார். இதுபோல சின்னாளபட்டி சிறப்புநிலை பேரூராட்சியில் 3வது வார்டு எஸ்.ஐ.ஆர். வாக்காளர் திருத்தல் பட்டியலில் பணிகளில் வாக்குச்சாவடி 301ல் 1089 வாக்காளர்களில் 878 வாக்காளர்களை சேர்த்துள்ளது. இதுதவிர 302ல் 854 வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் 710 வாக்காளர்களை சேர்த்து சின்னாளபட்டி பேரூரா ட்சியில் அதிக வாக்காளர்களை சேர்த்த வார்டாக உள்ளது குறிப்பிடதக்கது.



# சின்னமனூர் நகராட்சிக்கு சிறப்பு நகர் மன்ற உறுப்பினர் பதவி திமுக மாவட்டச் செயலாளர் வழங்கினார்

தேனி, நவ.27-

தேனி மாவட்டம் சின்னமனூர் நகராட்சிக்கு சிறப்பு நகர் மன்ற உறுப்பினர் பதவி சின்னமனூர் நகராட்சியில் தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ராமகிருஷ்ணன் தலைமையில் நகர மன்ற தலைவர் அய்யம்மாள் ராமு முன்னிலையில் முத்துவேல் அவர்களுக்கு வழங்கப்பட்டது. சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். இந்த நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையாளர் கோபிநாத், துணைத் தலைவர் முத்துக்குமார், மாவட்டத் துணைச் செயலாளர் செந்தில், திமுக பிரமுகர் பஞ்சாப் முத்துக்குமார், நண்பர்கள் முத்துவேல் பாண்டியன், சுரேஷ், திலீபன் மற்றும் வெற்றி மாற்றுத்திறனாளிகள் அறக்கட்டளை சார்பாகவும் நந்தகுமார்,பூபதி, பழனி குமார், தனலட்சுமி கலந்து கொண்டனர்.

# நெல்லையில் மழைக்கு 15 வீடுகள் சேதம்: ஆட்சியர் தகவல்



திருநெல்வேலி, நவ.27-

திருநெல்வேலி மாவட்டத்தில் பெய்த கன மழையால் 15 வீடுகள் பகுதியளவு சேதமடை ந்துள்ளதாக மாவட்ட ஆட்சியர் ஆர். சுகுமார் தெரிவித்துள்ளார். திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்து சில நாட்களாக கனமழை பெய்தது.

இதனால் தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. திருநெல்வேலி கொக்கிரகுளம் பகுதியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே தாமிரபரணி ஆற்றில் வெள்ளநீர் செல்வதை ஆட்சியர் நேற்று பார்வையிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்தது. தற்போது மழை குறைந்துள்ளது. இருப்பினும் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையால் அணைகளின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள பாலத்தில் நேற்று காலை 19 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து, தற்போது 32,787 கன அடியாக அதிகரித்துள்ளது.

தென்காசி மாவட்டத்தில் உள்ள கடனா மற்றும் ராமநதி அணைகளிலிருந்து வரும் நீர், பாபநாசம் அணையிலிருந்து வெளியேற்றப்பட்ட 12 ஆயிரம் கன அடி நீர் மற்றும் மணிமுத்தாறு அணையிலிருந்து வெளியேற்றப்பட்ட 4 ஆயிரம் கன அடி நீர் ஆகியவையே நீர்வரத்து உயர்வுக்கு காரணம்.

அச்சப்பட தேவையில்லை: மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பகுதியில் ஆற்றில் நீர்வரத்து 60 ஆயிரம் கன அடியை எட்டினால் வெள்ள பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. தற்போதைய சூழல் அப்படியில்லை. எனவே, பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை.

முன்னெச்சரிக்கையாக தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 26 பேர் கொண்ட சிறப்புக்குழு பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு அரங்கில் தயார் நிலையில் உள்ளனர்.

தேசிய பேரிடர் மீட்புப் படையினர் வள்ளியூரில் நிறுத்தப்பட்டுள்ளனர். காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளும் தயார் நிலையில் உள்ளனர்.

வெள்ள பாதிப்புக்குள்ளாகக் கூடிய 72 இடங்கள் கண்டறியப்பட்டு அங்கு ஜேசிபி இயந்திரங்கள், மரம் அறுக்கும் இயந்திரங்கள், மற்றும் மணல் மூட்டைகள் மற்றும் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் தயாராக உள்ளன.

பொதுப்பணித்துறை பொறியாளர்கள் நீர்நிலைகளின் கரையோரங்களில் ஏற்படும் சிறு உடைப்புகளை சரிசெய்ய தயார் நிலையில் உள்ளனர். பாபநாசம் அணையின் நீர்மட்டம் இன்று (நேற்று) காலை நிலவரப்படி 131 அடியாக உள்ளது. இது அதன் மொத்த கொள்ளளவில் 87.76 சதவீதம் ஆகும்.

மஞ்சள் எச்சரிக்கை: நேற்று முன்தினம் காலை ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப் பட்டிருந்த நிலையில், மழை குறைந்ததால் மாலையில் அது மஞ்சள் எச்சரிக்கையாக மாற்றப்பட்டது. தற்போது மஞ்சள் எச்சரிக்கை மட்டுமே நடைமுறையில் உள்ளது. கட்டுப்பாட்டு அறைக்கு இதுவரை வந்த 60 அழைப்புகளில், 50 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 20 ஹெக்டேர் பரப்பளவிலான பயிர்கள் நீரில் மூழ்கியிருந்த நிலையில், தற்போது நீர் வடிந்துள்ளது. நெற்பயிர்களின் சேதம் நீர் முழுமையாக வடிந்த பின்னரே கணக்கிடப்படும். வாழை சேதம் ஆரம்பத்தில் 1 லட்சம் என மதிப்பிடப்பட்ட நிலையில், அது குறைவாக இருக்கலாம் எனக் கணிக்கப்படுகிறது.

மாவட்டத்தில் மழைக்கு 15 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன. முழுமையாக வீடுகள் சேதம் ஏதும் இல்லை. மின்கம்பம் விழுந்ததில் ஒரு மாடு உயிரிழந்தது. ராதாபுரம் தாலுகாவில் கூரை வீடு இடிந்து விழுந்ததில் ஒருவருக்கு சிறிய காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்று நலமாக உள்ளார். மாவட்டத்தின் ஒட்டுமொத்த சூழல் அமைதியாக உள்ளது என தெரிவித்தார்.



# மதுரையின் புராதன சின்னங்களில் டிஜிட்டல் ஒளி அலங்காரம் சுற்றுலாத் துறை புதிய திட்டம்

மதுரை, நவ.27-

மதுரையின் பாரம்பரிய நினைவு புராதனச் சின்னங்களை அடையாளப்படுத்தவும், அவற்றை டிஜிட்டல் ஒளி அலங்காரம் மூலம் காட்சிப்படுத்தி சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும், சுற்றுலாத்துறை திட்டம் தயார் செய்து வருகிறது.

மதுரையை ஆட்சிசெய்த திருமலை நாயக்கர், இந்த நகருக்கு பல்வேறு அடையாளங்களையும், நினைவுச் சின்னங்களையும் விட்டுச் சென்றுள்ளார். அவற்றில் திருமலை நாயக்கர் மகால், வண்டியூர் தெப்பக்குளம், புதுமண்டபம், பத்து தூண், விளக்குதூண் போன்றவை முக்கியமானவை.

இதில் கீழமாசி வீதியும், தெற்கு மாசி வீதியும் சந்திக்கும் இடத்தில் அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய இரும்புத் தூண் மீது விளக்குகள் பொருத்தப்பட்டிருக்கும் இந்த விளக்குதூண், ஜவுளிக் கடைகளுக்கு பெயர் பெற்ற பகுதி. இதுபோல், விளக்குத்தூண் அருகில் வரிசையாக பத்து தூண்கள் அமைந்துள்ளன.

திருமலை நாயக்கர் காலத்தில் இந்த தூண்களில்தான் அரண்மனை யானைகள் கட்டி வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது. இதுபோன்ற மதுரையின் பராம்பரிய நினைவுச் சின்னங்களை சுற்றுலாப் பயணிகளுக்கும், உள்ளூர் மக்களுக்கும் அடையாளப்படுத்தவும், அவர்களை கவரவும், டிஜிட்டல் முறையில் ஒளி அலங்காரம் செய்து காட்சிப்படுத்த, மத்திய அரசின் கலாச்சார அமைச்சகம் சுற்றுலாத்துறை மூலம் திட்டம் தயார் செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து சுற்றுலாத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'பத்து தூண், விளக்கு தூண், திருமலை நாயக்கர் மகால், தெப்பக்குளம் போன்ற மதுரையின் அடையாளங்களை சுற்றுலாப் பயணிகளுக்கு காட்சிப்படுத்த புரொஜக்டர் மூலம் டிஜிட்டல் ஒளி அலங்காரம் மேற்கொள்ளலாமா? என்பது குறித்து சுற்றுலாத் துறை ஆய்வு செய்து வருகிறது.

இதற்காக, தற்போது மகாலில் தினமும் நடக்கும் ஒளிஒலி நிகழ்ச்சி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மற்ற இடங்களிலும் எந்த வகையில் டிஜிட்டல் ஒளி அலங்காரம் அமைக்கலாம் என ஆய்வு நடக்கிறது. இதற்கான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணியும் நடக்கிறது' என்றார்.



# "50 ஆண்டு உழைப்புக்கு நீக்கம் தான் பரிசு" செங்கோட்டையன் வேதனை

கோவை, நவ.27-

ஐம்பது ஆண்டுகால உழைப்பிற்கு அதிமுகவின் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கி பரிசு கொடுத்துள்ளனர் என முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சரும், கோபி தொகுதி எம்.எல். ஏவுமான கே.ஏ.செங்கோட்டையன், கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டார்.

இதன்பிறகும் அதிமுக ஒன்றிணைய வேண்டும் என்று செங்கோட்டையன் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இந்நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தில் செங்கோட்டையன் இணைய உள்ளதாக தகவல்கள் வெளியானது.

சென்னை செல்வதற்காக நேற்று மாலை கோவை விமான நிலையம் வந்த செங்கோட்டையனிடம், செய்தியாளர்கள் இதுகுறித்து கேட்டனர். அப்போது அவர் கூறியதாவது: எனது 50 ஆண்டு கால அரசியல் வரலாற்றில், ஏற்றத்தாழ்வுகளை சந்தித்து, இயக்கத்திற்காக உழைத்துள்ளேன்.

அப்படிப்பட்ட என்னை கட்சியின் உறுப்பினராகக் கூட இருக்கக் கூடாது என்று முடிவு செய்து, நீக்கம் செய்து பரிசு கொடுத்துள்ளனர். இந்த மன வேதனை என்பது உங்களைப் போன்றவர்களுக்கு நன்றாக தெரியும். இதற்கு மேல் எந்த கருத்தையும் சொல்வதற்கு இல்லை, என்றார்.




# "வட மாநிலத்தவருக்கு தமிழகத்தில் வாக்குரிமை வழங்கக் கூடாது" பிரேமலதா சொல்கிறார்

நீலகிரி, நவ.27-

வட மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு தமிழகத்தில் வாக்குரிமை கூடாது என்று தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

'உள்ளம் தேடி இல்லம் நாடி' என்ற பெயரில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தமிழ்நாடு முழுவதும் அரசியல் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். அதன்படி நேற்று, நீலகிரி மாவட்டம் குன்னூருக்கு வந்த அவருக்கு தொண்டர்கள் வரவேற்பு அளித்தனர்.

குன்னூர் அருகில் உள்ள கோடமலை படுகர் சமுதாய மக்களின் கிராமத்துக்குச் சென்ற அவர், அவர்களுடன் சேர்ந்து படுகர் நடனமாடி மகிழ்ந்தார். அப்போது செய்தியாளர்களிடம் பிரேமலதா விஜயகாந்த் கூறியதாவது:

தமிழ்நாட்டில் வட மாநிலத்தோருக்கு வாக்குரிமை வழங்கினால் மக்கள் புரட்சி வெடிக்கும். வட மாநிலத்திவர் இங்கு (தமிழ்நாடு) வாருங்கள், வேலை பாருங்கள். வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.ஆனால் வாக்குரிமை என்பது அவரவர் பிறந்த மாநிலத்தில் தான் இருக்க வேண்டும். வடமாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு இங்கு வாக்குரிமை கொடுத்தால் அது தவறான முன்னுதாரணமாகிவிடும்.

கடலூரில் ஜனவரி 9ம் தேதி தேமுதிக மாநில மாநாடு பிரம்மாண்டமாக நடைபெற இருக்கிறது. மக்கள் உரிமை மீட்பு மாநாடு 2.0 என்ற பெயரில் நடத்தப்படும் அந்த மாநாட்டில் எங்களின் கூட்டணி நிலைப்பாடு குறித்து தெளிவான முடிவுகள் எடுக்கப்படும். 234 தொகுதிகளிலும் தேமுதிக வலுவாக இருக்கிறது.

2026 தேர்தல் மட்டுமின்றி அதற்கு அடுத்து வரவிருக்கும் உள்ளாட்சி தேர்தலிலும் எங்கள் கட்சி பெரிய அளவில் வெற்றி பெறும். வெறுமனே ராஜ்யசபா சீட்டுக்காக கூட்டணி வைக்கும் இயக்கம் இந்த இயக்கம் கிடையாது. தொண்டர்கள் விரும்பும், மக்கள் விரும்பும் கூட்டணியை வலுவாக அமைப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

# எஸ்ஐஆர் பணிகளில் தமிழக அளவில் திருவண்ணாமலை மாவட்டம் முதலிடம்

திருச்சி, நவ.27-

எஸ்ஐஆர் பணிகளை திறம்பட மேற்கொள்வதில் தமிழக அளவில் 8வது இடத்திலிருந்த திருச்சி மாவட்டம் 5வது இடத்துக்கு முன்னேறி உள்ளது. திருவண்ணாமலை மாவட்டம் முதலிடம் பிடித்துள்ளது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்த (எஸ்ஐஆர்) பணி நவ.4ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் தேர்தல் ஆணைய கணக்குப்படி 6 கோடியே 41 லட்சத்து 14,587 வாக்காளர்கள் உள்ளனர். இதில் 6 கோடியே 20 லட்சத்து 80,532 வாக்காளர்களுக்கு எஸ்.ஐ.ஆர் முன்நிரப்பப்பட்ட கணக்கீட்டு படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் 3 கோடியே 72 லட்சத்து 57,812 படிவங்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர் (பிஎல்ஓ ஆப்) செயலியில் (டிஜிட்டல்) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. திருச்சி மாவட்டத்தில் 9 சட்டப்பேரவைத் தொகுதிகளில் மொத்தம் 23,68,968 வாக்காளர்கள் உள்ளனர்.

மாவட்ட ஆட்சியர் வே.சரவணன் தலைமையில் எஸ்ஐஆர் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. 2,543 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று வாக்காளர்களுக்கு முன்நிரப்பப்பட்ட கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கி, அதனை பூர்த்தி செய்து வாக்காளர்களிடமிருந்து திரும்பப் பெற்று, பிஎல்ஓ செயலியில் செல்ஃபோன் மூலம் பதிவேற்றம் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

நவ.25ம் தேதி வரை 22,74,733 படிவங்கள் விநியோகிக்கப்பட்டு, 15,38,829 பூர்த்தி செய்த படிவங்கள் பிஎல்ஓ செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இன்னும் 7,35,904 படிவங்கள் பிஎல்ஓ செயலியில் பதிவேற்றும் பணிகள் மட்டுமே பாக்கி உள்ளது. தவிர, 94,235 படிவங்கள் இன்னும் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படாமல் உள்ளது.

எஸ்ஐஆர் பணிகளை சிறப்பாக மேற்கொள்வதில் தமிழக அளவில் கடந்த 3 தினங்களுக்கு முன் 8வது இடத்தில் இருந்த திருச்சி மாவட்டம் நேற்று முன்தினம் மாலை 6 மணி நிலவரப்படி 5வது இடத்துக்கு முன்னேறி உள்ளது. தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களில் எஸ்ஐஆர் பணிகளை திறம்பட மேற்கொள்ளும் மாவட்டங்களை தேர்தல் ஆணையம் வரிசைப்படுத்தி உள்ளது.

அதன்படி தமிழக அளவில் முதல் 10 இடங்களில் உள்ள மாவட்டங்கள் சதவீத அடிப்படையில் வருமாறு:

திருவண்ணாமலை மாவட்டம் 81.86 சதவீதம் எஸ்ஐஆர் பணிகளை நிறைவு செய்து முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்து 2 முதல் 10 இடங்களில் பெரம்பலூர் மாவட்டம் 80.74 சதவீதம், கன்னியாகுமரி 77.69 சதவீதம், தர்மபுரி 76.54 சதவீதம், திருச்சி 72.13 சதவீதம், அரியலூர் 72.1 சதவீதம், தஞ்சாவூர் 69.55, ராணிபேட்டை 68.33 சதவீதம், விழுப்புரம் 67.81 சதவீதம், ராமநாதபுரம் 67.52 சதவீதம் என முதல் 10 இடங்களில் உள்ளன.

50.4 சதவீதம் பணிகளை நிறைவு செய்து கோயம்புத்தூர் 37வது இடத்திலும், 45.36 சதவீதம் பணிகளை நிறைவு செய்து சென்னை கடைசியாக 38வது இடத்திலும் உள்ளன.

பொதுவாக நகர் பகுதிகளில் வேலை, தொழில் நிமித்தமாக தங்கியிருக்கும் வாக்காளர்கள் இடம் பெயர்வு அதிகம் இருப்பதால், மாநகராட்சி, நகராட்சி பகுதிகள் மற்றும் தொழில் வளர்ச்சி கண்ட திருப்பூர், கோவை போன்ற மாவட்டங்களில் வாக்காளர்களுக்கு படிவங்களை வழங்கி, திரும்பப் பெறுவதில் கடும் சவால் இருப்பதாக களத்தில் உள்ள பிஎல்ஓக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

டிச.4ம் தேதிக்குள் இப்பணிகளை முடிக்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. நடைமுறையில் உள்ள சவால்களை கருத்தில் கொண்டு இதற்கான காலக்கெடுவை நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.



■ மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுத்தலைவர் / ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.கு.செல்வபெருந்தகை அவர்கள் பாலின சமத்துவத்திற்கான தேசிய அளவிலான பிரச்சாரத்தினை சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

# குற்ற வழக்கால் வேலை வாய்ப்பு இழந்த இளைஞருக்கு ரூ.8 லட்சம் இழப்பீடு வழங்க அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு



மதுரை, நவ.27-

தஞ்சாவூரில் 8 ஆண்டுகளாக நிலுவையில் இருக்கும் குற்ற வழக்காமல் வேலை வாய்ப்புகளை இழந்த இளைஞர் ஒருவருக்கு தமிழக அரசு ரூ.8 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம் மதுக்கூரைச் சேர்ந்தவர் சரத்குமார், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: நான் உட்பட 5 பேர் வழிப்பறி செய்யும் நோக்கத்துடன் பதுங்கியிருந்ததாக எங்கள் மீது மதுக்கூர் போலீஸார் 2017ல் வழக்கு பதிவு செய்தனர். இந்த வழக்கில் 8 ஆண்டுகளாக போலீஸார் இதுவரை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமல் உள்ளனர். எனவே வழக்கை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதி பி.புகழேந்தி விசாரித்தார். மனுதாரர் வழக்கறிஞர் வாதிடுகையில், "இந்த வழக்கால் மனுதாரரால் இந்தியாவிலும், வெளிநாடுகளுக்கும் வேலைக்கு செல்ல முடியவில்லை. குற்ற வழக்கு நிலுவையில் இருப்பதால் விசா விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன.

எந்த ஆதாரமும் இல்லாமல் யூகத்தில் அடிப்படையில் மனுதாரர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 8 ஆண்டுகளாக வழக்கு விசாரணை நிலையிலேயே உள்ளது. இதனால் மனுதாரர் மற்றும் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளவர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளது" எனக் கூறப்பட்டது.

தஞ்சாவூர் எஸ்பி தாக்கல் செய்த பதில் மனுவில், 'மனுதாரர் மீதான வழக்கு பதிவு செய்த நாளிலிருந்து மதுக்கூர் காவல் நிலையத்தில் 10 காவல் ஆய்வகாளர்கள் பணியில் இருந்துள்ளனர். இருப்பினும் விசாரணையை முடித்து நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் சம்பந்தப்பட்ட 10 காவல் ஆய்வாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' எனக் கூறப்பட்டிருந்தது.

இதையடுத்து நீதிபதி பிறப்பித்த உத்தரவில், 'குற்றம் புரியும் நோக்கத்துடன் சிலர் கூடியிருந்ததாக வழக்கு பதிவு செய்யும்போது அதை நிரூபிக்க ஆதாரங்கள் இருக்க வேண்டும். இந்த வழக்கில் அதுபோன்ற எந்த ஆதாரமும் இல்லை.

போலீஸார் எட்டு ஆண்டுகளாக விசாரணை நடத்தாமலேயே உள்ளனர். 2017ல் பதிவு செய்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையை 24.6.2025 ல் தான் நீதிமன்றத்துக்கு அனுப்பியுள்ளனர்.

இது பொய் வழக்கு என்பது தெரிகிறது. இதனால் வழக்கு ரத்து செய்யப்படுகிறது. வழக்கை ரத்து செய்வதால் மட்டும் மனுதாரருக்கு நீதி கிடைக்காது. இந்த வழக்கால் மனுதாரர் 8 ஆண்டுகளாக வேலை வாய்ப்புகளை இழந்துள்ளார். சமூகத்தில் நற்பெருமையுடன் வாழும் உரிமையை இழந்துள்ளார்.

இதனால் மனுதாரருக்கு 3 மாதத்தில் அரசு ரூ.8 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும். இப்பணத்தை சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகளிடம் இருந்து அரசு திரும்ப வசூலிக்கலாம்' என்று நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.

# டெல்டா மாவட்டங்களில் மழைநீரில் மூழ்கி 5 லட்சம் ஏக்கர் நெற்பயிர்கள் சேதம்: பி.ஆர்.பாண்டியன் தகவல்



திருவாரூர், நவ.27-

திருவாரூர் மாவட்டம் கோட்டூர் ஒன்றியம் திருக்களார், அக்கரைக்கோட்டகம், புழுதுக்குடி, கோட்டூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களை தமிழக காவிரி விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.ஆர்.பாண்டியன் நேற்று பார்வையிட்டு, பாதிப்புகள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார்.

பின்னர், திருக்களாரில் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: காவிரி டெல்டாவில் தஞ்சாவூர், நாகை, திருவாரூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் 10 லட்சம் ஏக்கரில் சம்பா, தாளடி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்து வருகிறது.

ஓரிரு வாரங்கள் பெய்ய வேண்டிய மழை ஓரிரு மணி நேரங்களில் கொட்டி தீர்க்கிறது. இதனால், 5 லட்சம் ஏக்கருக்கும் மேல்சம்பா, தாளடி பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. தொடர்ந்து மழை தீவிரமடைந்தால், பேராபத்து ஏற்படும்.

பொன்னுக்கு முன்டானாறு, சாளுவனாறு, வளவனாறு உள்ளிட்ட பாசன வடிகால் ஆறுகளில் ஆகாயத் தாமரை புதர்போல மண்டிக் கிடக்கின்றன. இதனால், மழைநீர் வடியாமல் வயல்வெளிகள் கடல்போல காட்சியளிக்கின்றன. பயிர்கள் அழுகத் தொடங்கியுள்ளன.

எனவே, தமிழக அரசு உடனடியாக அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் கொண்ட குழுவை அனுப்பிவைத்து பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட வேண்டும். பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும்.

ஆகாயத் தாமரை செடிகளை அகற்றுவதற்கு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார். இதில், மாவட்டச் செயலாளர் குடவாசல் சரவணன், கோட்டூர் தெற்கு ஒன்றியத் தலைவர் ராஜகோபால் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# கரூர் கூட்ட நெரிசல் விவகாரம்: சிபிஐ விசாரணைக்கு 2-வது முறையாக நகர இன்ஸ்பெக்டர் ஆஜர்



கரூர், நவ.27-

கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு சம்பவங்கள் தொடர்பாக சுற்றுலா மாளிகையில் சிபிஐ விசாரணைக்கு கரூர் நகர இன்ஸ்பெக்டர் ஜி.மணிவண்ணன் 2வது முறையாக ஆஜரானார்.

கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப்.27ம் தேதி நடந்த தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்த வழக்கை விசாரித்து வரும் சிபிஐ, இது தொடர்பாக 300 க்கும் மேற்பட்டவர்களுக்கு சம்மன் அனுப்பியும், சிலரை போன் மூலம் அழைத்தும், நேரில் சென்றும் அக்.30ம் தேதி முதல் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த கரூர் நகர இன்ஸ்பெக்டர் ஜி.மணிவண்ணனிடம் அக்.30ம் தேதி முதற்கட்டமாக விசாரணை தொடங்கப்பட்டது. தொடர்ந்து வேலுசாமிபுரத்தில் கடை வைத்திருப்பவர்கள், பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட போலீஸார், ஆம்புலன்ஸ் உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், பவர் கிரிட், மின் வாரிய, நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள், கூட்ட நெரிசலில் காயமடைந்தவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது.

மேலும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர், காயமடைந்தவர்கள் வீடுகளுக்கு நேரில் சென்று விசாரணை நடத்தினர். நவ.3ம் தேதி பனையூர் தவெக அலுவலகத்திற்கு நேரில் சென்று பிரச்சார வாகன கேமரா பதிவுகள், நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் விபரங்களை கேட்டு சம்மன் வழங்கப்பட்டது.

நவ.8 மற்றும் 9ம் தேதி ஆகிய இரு நாட்கள் தவெக வழக்கறிஞர் அரசு உள்ளிட்டோர் பிரச்சார வாகனத்தின் சிசிடிவி கேமரா பதிவுகள் அடங்கிய வீடியோக்கள், நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் விவரங்கள் அடங்கிய ஆவணங்களையும் ஒப்படைத்து 2 நாட்களாக விளக்கம் அளித்தனர்.

நவ.16ம் தேதி நாமக்கல் ஏஎஸ்பி ஆகாஷ்ஜோஷியிடம் விசாரணை நடைபெற்றது. நவ.19ம் தேதிக்கு பிறகு 4 நாட்கள் சிபிஐ விசாரணைக்கு யாரும் ஆஜராகாத நிலையில், நவ.24ம் தேதி தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி என்.ஆனந்த், தேர்தல் பிரிவு மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா, இணைச் செயலாளர் சி.டி.நிர்மல்குமார், கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் வி.பி.மதியழகன், பவுன்ராஜ், வழக்கறிஞர் அரசு ஆகியோர் சிபிஐ விசாரணைக்கு ஆஜராகினர்.

2வது நாளாக நேற்று புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சி.டி.நிர்மல் குமார், வி.பி.மதியழகன், வழக்கறிஞர் அரசு ஆகியோர் ஆஜராகினர். 3 மணி நேர விசாரணைக்கு பிறகு அவர்கள் புறப்பட்டனர். கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் வி.பி.மதியழகன் மதியம் உணவுக்கு பிறகு மீண்டும் ஆஜரான நிலையில், இரவு 7 மணி வரை விசாரணை நடத்தப்பட்டது.

இந்நிலையில், இன்று (நவ.26) கரூர் சுற்றுலா மாளிகையில் சிபிஐ விசாரணைக்கு அக்.30 ம் தேதிக்கு பிறகு கரூர் நகர இன்ஸ்பெக்டர் ஜி.மணிவண்ணன் 2வது முறையாக ஆஜரானார். தவெக தலைவர்களிடம் நேற்று விசாரணை நடத்தப்பட்ட நிலையில், இன்ஸ்பெக்டர் ஆஜரானதால் அவர்கள் தெரிவித்த புகார்கள் அடிப்படையில் விளக்கம் அளித்திருக்கலாம்; அது தொடர்பான ஆவணங்களை அளித்திருக்கலாம் எனத் தெரிகிறது. சுமார் அரை மணி நேர விசாரணைக்கு பிறகு அவர் புறப்பட்டுச் சென்றார்.

முன்னதாக, கரூர் வெங்கமேட்டை சேர்ந்த ஜவுளி உற்பத்தியாளர் செந்தில், கோவை ஹிந்துஸ்தான் ஜனதா கட்சி நிர்வாகி ராகுல்காந்தி, நொய்யகலை சேர்ந்த கோகுலகிருஷ்ணன், நாமக்கல் மாவட்டம் ஒடுவந்தூரை சேர்ந்த தேமுதிக ஒன்றிய இணை செயலாளர் நவலடி ஆகியோர் ஆஜராகினர். செந்தில் சுமார் 1 மணி நேரத்திற்கு பிறகு வெளியே வந்தார்.

நொய்யலை சேர்ந்த கோகுலகண்ணன், கரூர் வேலுசாமிபுரத்தில் தவெக பிரச்சார கூட்டம் நடப்பதற்கு 2 நாட்களுக்கு முன்பு கரூரில் சனிக்கிழமை சம்பள நாள் என்பதால், தவெக பிரச்சார கூட்டத்திற்கு அனுமதி வழங்கக் கூடாது என பதிவிட்டுள்ளார். இதனை ஆன்லைன், காட்சி ஊடகங்கள் வெளியிட்டிருந்த நிலையில், சிபிஐ விசாரணைக்கு சம்மன் அனுப்பப்பட்டதால் ஆஜரானார்.

## சாத்தான்குளம் கொலை வழக்கு விசாரணையை முடிக்க மேலும் 3 மாத அவகாசம்: உயர் நீதிமன்றம் உத்தரவு

மதுரை, நவ.27-

சாத்தான்குளம் தந்தை, மகன் கொலை வழக்கு விசாரணையை முடிக்க விசாரணை நீதிமன்றத்துக்கு மேலும் 3 மாத அவகாசம் வழங்கி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தை சேர்ந்தவர் ஜெயராஜ், இவரது மகன் பெனிக்கிஸ். இவர்கள் செல்போன் கடை நடத்தி வந்தனர். கடந்த 2020 ஜூன் 19ல் கரோனா ஊரடங்கு நேரக் கட்டுப்பாடு தாண்டி கடையை திறந்து வைத்திருந்ததாக கூறி ஜெயராஜ், பெனிக்ஸ் இருவரையும் போலீஸார் விசாரணைக்காக சாத்தான்குளம் காவல் நிலையம் அழைத்துச் சென்றனர். காவல் நிலையத்தில் வைத்து தந்தை, மகன் இருவரையும் போலீஸார் கடுமையாக தாக்கியுள்ளனர்.

பலத்த காயமடைந்த நிலையில் முதலில் பெனிக்ஸ், பின்னர் ஜெயராஜ் ஆகியோர் உயிரிழந்தனர். தமிழகம் முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய தந்தை, மகன் கொலை வழக்கை உயர் நீதிமன்ற மதுரை அமர்வு சிபிஐ விசாரணைக்கு மாற்றியது.

இதையடுத்து சிபிஐ போலீஸார் கொலை வழக்கு பதிவு செய்து சாத்தான்குளம் காவல் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகு கணேஷ், தலைமை காவலர்கள் முருகன், காவலர்கள் முத்துராஜா, செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயில் முத்து உள்ளிட்ட 9 பேரை கைது செய்து மதுரை மத்திய சிறையில் அடைத்தனர். இந்த வழக்கு மதுரை மாவட்ட முதலாவது கூடுதல் நீதிமன்றத்தில் கடந்த 5 ஆண்டுகளாக விசாரணையில் உள்ளது. கைதான 9 பேரும் ஜாமீன் கோரி விசாரணை நீதிமன்றம், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுக்கள் தள்ளுபடியானதால் கைதான நாளிலிருந்து சிறையில் உள்ளனர். இந்த வழக்கில் சிபிஐ குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. சம்பவத்தின் போது சாத்தான்குளம் காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவலர்களான பியூலா, ரேவதி உட்பட 50 க்கும் மேற்பட்ட சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்கின் விசாரணையை 6 மாதத்தில் முடிக்க உயர் நீதிமன்றம் ஏற்கெனவே உத்தரவிட்டது. இந்நிலையில் விசாரணையை முடிக்க மேலும் 6 மாதம் அவகாசம் கேட்டு விசாரணை நீதிமன்றம் தரப்பில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனுவை விசாரித்த நீதிபதி கே.முரளிசங்கர், வழக்கு விசாரணையை முடிக்க இறுதியாக 3 மாத அவகாசம் வழங்கப்படுகிறது. இந்த காலக்கெடுவிற்குள் விசாரணையை முடிக்கவும் உத்தரவிட்டார்.



# தாமிரபரணியில் 30,000 கன அடி தண்ணீர் ஸ்ரீவைகுண்டம் அணையை தாண்டி கடலுக்கு பாய்கிறது

தூத்துக்குடி, நவ.27-

தொடர் மழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஸ்ரீவைகுண்டம் அணையை தாண்டி 30 ஆயிரம் கன அடி தண்ணீர் சென்றது. கரையோர மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழை காரணமாக அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. அணைகளில் இருந்து தாமிரபரணியில் உபரிநீர் திறந்து விடப்பட்டுள்ளது.

பல்வேறு காட்டாறுகளின் வெள்ளமும் கலப்பதால் தாமிரபரணி ஆற்றில் கடந்த சில நாட்களாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. தாமிரபரணி ஆற்றின் கடைசி அணைக் கட்டான ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டை தாண்டி நேற்று மாலை நிலவரப்படி 30 ஆயிரம் கன அடி தண்ணீர் கடலுக்கு சென்று கொண்டிருந்தது.

மேலும், ஏரல் தரைமட்ட பாலத்தை மூழ்கடித்தவாறு தண்ணீர் ஆர்ப்பரித்து செல்கிறது. தாமிரபரணி ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தொடர் மழை காரணமாக அணை களில் இருந்து அதிகபடியான உபரிநீர் தாமிரபரணி ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது.

எனவே, மருதூர் மற்றும் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு பகுதிகள், கலியாவூர் முதல் புன்னக்காயல் வரை தாமிரபரணி ஆற்றங்கரையோர கிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள், கோரம்பள்ளம் ஆறு மற்றும் அணைக்கட்டு பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் ஆற்றில் குளிக்கவோ, ஆற்றின் கரையோர பகுதிகளுக்கு செல்லாமல் பாதுகாப்பாக இருக்கும் படியும், மாவட்டத்தின் மழை நீர் தேங்க கூடிய இதர தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களும் பாதுகாப்பாக இருக்கும் படியும் எச்சரிக்கப்படுகிறார்கள்.

மேலும், மருதூர் அணைக்கட்டு, ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு, கோரம் பள்ளம் அணைக்கட்டு, உப்பாறு ஓடை, உப் பாத்து ஓடை மற்றும் அனைத்து நீர் நிலைகளையும் உன்னிப்பாக கண்காணித்து உரிய நடவடிக்கைகளை அனைத்து துறை அலுவலர்கள் உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது என அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# வலுக்கும் காற்றழுத்த தாழ்வு மண்டலம்: வட தமிழகத்தில் நவ.29, 30ல் அதி கனமழை எச்சரிக்கை

சென்னை, நவ.27-


மலாக்கா அருகே நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், 'சென்யார்' புயலாக வலுப்பெற்று இந்தோனேசியாவில் கரையை கடந்தது. இலங்கை அருகே நாளை உருவாகும் காற் றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக வட தமிழகத்தில் நவ.29, 30 தேதிகளில் ஓரிரு இடங்களில் அதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மலாக்கா ஜலசந்தி பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், 'சென்யார்' புயலாக வலுப்பெற்று, மலாக்கா ஜலசந்தி மற்றும் அதனை ஒட்டிய வடமேற்கு இந்தோனேசியா பகுதிகளில் நிலவியது. பிறகு, தென்மேற்கு திசையில் நகர்ந்து, இந்தோனேசிய கடற்கரையை கடந்தது.

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு இலங்கை - இந்திய பெருங்கடல் பகுதிகளில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி நிலவுகிறது. இது நாளை (நவ.27) வடமேற்கு திசையில் நகர்ந்து, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும். அதற்கடுத்த 48 மணி நேரத்தில், மேலும் வலுப்பெற்று, அதே திசையில் நகர்ந்து, தென்மேற்கு வங்கக் கடல் பகுதிகளில், வட தமிழகம் ஸ்ரீ புதுச்சேரி கடலோரப் பகுதிகளை நோக்கி நகரக்கூடும்.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை ஓரிரு இடங்களிலும், 28ம் தேதி கடலோர தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 29ம் தேதி வட தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 30ம் தேதி வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், டிச.1, 2 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை (நவ.26) ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களிலும்,



28ம் தேதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கன முதல் மிக கனமழையும், ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை, மயிலாடுதுறை, கடலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது.

29ம் தேதி திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில், ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழையும், ஓரிரு இடங்களில் அதி கனமழையும் பெய்யக் கூடும்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப் பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கன முதல் மிக கனமழையும், புதுக்கோட்டை, திருச்சி, திருப்பத்தூர், வேலூர், தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்யக்கூடும்.

30ம் தேதி திருவள்ளூர் மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கன முதல் அதி கனமழையும், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. டிச.1ம் தேதி திருவள்ளூர் மாவட்டத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரியிலும் கனமழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை (நவ.27) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் 29ம் தேதி வரை சூறாவளிக்காற்று அதிகபட்சமாக 65 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும்.

30ம் தேதி வட தமிழக கடலோரப் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 50 முதல் 60 கிமீ வேகத்திலும், இடையிடையே 70 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும். தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று அதிகபட்சமாக 65 கி.மீ வேகத்தில் வீசக்கூடும்.

எனவே, இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக ராமநாதபுரம் மாவட்டம் பாம்பனில் 8 செமீ, ராமேஸ்வரத்தில் 6 செமீ, மண்டபத்தில் 5 செமீ, தங்கச்சிமடத்தில் 4 செமீ, வாலிநோக்கத்தில் 2 செமீ மழை பதிவாகியுள்ளது என்று செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000